# கிருபையுள்ள வார்த்தை
**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 21 | December டிசம்பர் | 2020

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


## மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க,... இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்

**எபிரெயர் 12:1**




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE**    ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| அடிப்படை வேத... | 10 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**

**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

### ஜாய் T.V. யில்

**சனி இரவு 9:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### OUR ENGLISH TV PROGRAM

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**


**Jerry Bates & Kingsly Rajah**


**கிருபையுள்ள வார்த்தை**

வேதாகம முன்மாதிரிகளின்படி நம்மை நடக்க தூண்டும் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 103**

# இத்தனை திரளான சாட்சிகள்

ஆசிரியர் உரை

P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!**

**எபிரெயர் 11ம்** அதிகாரத்தில், வேதாகமம் நமது விசுவாச வாழ்விற்கு தேவையான நிறைய முன்மாதிரியானவர்களை அடையாளப்படுத்துகிறது. எபிரேயர் 12:1ல் முற்பிதாக்கள் மற்றும் தேவதாசர்கள் அனைவரும் சாட்சியுள்ள வாழ்வு வாழ்வது எப்படி? என்பதற்கு நமக்கான சாட்சிகளாக இருக்கின்றதாக பைபிள் முன்னிறுத்துவதால், நாம் இந்த மாதம் பழைய ஏற்பாட்டில் உள்ள வேதாகம முன்மாதிரிகளை பற்றி தியானம் செய்ய நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

## 1. ஆபிரகாம் – விசுவாசம்

**ரோமர் 4:17–21** "அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான். உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமாயிக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் விசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்த, விசுவாசத்தில் வல்லவனானான்."

ஆபிரகாம் என்றாலே நாம் உடனே சொல்லிவிடக்கூடிய காரியம் அவன் விசுவாசத்தின் தகப்பன் என்பதாகும். ஆபிரகாமை போல எங்களை ஆசீர்வதியும் என வேண்டிக்கொள்ளும் அநேகர் ஆபிரகாமை போல உம்மை விசுவாசிக்கின்ற இருதயத்தை தாரும் என வேண்டுவது அரிதானதாக இருக்கின்றது. ஆபிரகாமை போல நாம் அனைவரும் அவரை விசுவாசிக்க வேண்டும் என்பதற்காகத் தான். வேதம் அவரை விசுவாசத்தின் தகப்பன் என அழைக்கிறது. ஆபிரகாமுடைய விசுவாசம் என்பது தேவன் தனக்கு கொடுப்பேன் என்று சொன்ன ஒன்றையும் கொடுக்காத போதும், அவரை சர்வவல்லவராக, உண்மையுள்ளவராக விசுவாசித்தார். அவர் காண்பிக்கிற வழியில் சென்றார். அவர் சொல்கின்ற வாழ்வு வாழ்ந்தார் மற்றும் அவருக்காக எல்லாவற்றையும், எதையும் இழக்க துணிவு கொண்டார். தாமதம் ஆக ஆக விசுவாசம் கூடிக்கொண்டே சென்றதே ஒழிய குறையவில்லை. அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். தேவனுடைய வார்த்தைகளை (வாக்குத்தத்தங்களை) குறித்து அவன் எவ்வளவும் சந்தேகப்படவேயில்லை. தேவன் சொன்னால் செய்வார் என்பதை முழு நிச்சயமாய் நம்பி விசுவாசத்தில் வல்லவனானார். நாம் எப்படி? நம் விசுவாசம் எந்த நிலையில் உள்ளது? இந்த ஆண்டு முழுவதும் நம் விசுவாச வாழ்வு எப்படிப்பட்டதாக இருந்தது? நம்மை நாமே நிதானித்து அறிவோம். வரப்போகின்ற ஆண்டை எப்படிப்பட்ட விசுவாசத்துடன் அனுகப்போகிறோம். என்பதையும் யோசித்து செயல் படுத்துவோம்.

**2கொரி 13:5** "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீ ங்களேப ரீட்சித்துப்ப ாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்."

## 2. தாவீது – தைரியம்

**1 சாமுவேல் 17:45–47** "அதற்குத் தாவீது பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளையத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டென் று

பூலோகத்தார் எல்லாரும் அறிந்துக்கொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்."

தாவீதரசனை பற்றி படிப்பவர் அனைவரும் அவர் கோலியாத்தை வென்றதை நிச்சயம் அறிந்திருப்பார்கள். தாவீதின் வீரத்திற்கு அது மிகச்சிறந்த ஒரு எடுத்துகாட்டாகும். சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று அன்றைய நாட்களிலும், இன்றைய நாட்களிலும் அது பாராட்டப்படுகின்றது. அந்த வீரதீர செயலை செய்ய தாவீது எவ்வாறு தைரியம் கொண்டார் என்பதே, நாம் அறிய வேண்டிய மிகச்சிறந்த பாடமாகும். தேவனுடைய வார்த்தைகளிடமிருந்தும் மற்றும் அவருடைய செயல்களிலிருந்தும் தாவீது அந்த தைரியத்தை பெற்றுக்கொண்டதை அவரே விவரிக்கிறார். எதிர்பாராத சூழ்நிலைகளில் துயரமான மற்றும் போராட்டமான காரியங்களை நாம் சந்திக்கும் போது, நமது மனோ நிலை தைரியமாக உள்ளதா? அல்லது பயமாக உள்ளதா? தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை நாம் மறந்து விடுகிறோமா? தேவன் நமக்காக செயல்படுவார் என்பதை உணராதிருக்கிறோமா? கோலியாத்தை கொன்றது தாவீதோ, அவன் வீசிய கூலாங்கல்லோ அல்ல, தேவனுடைய வார்த்தைகளினாலும், செயல்களினாலும் அவன் கொண்டிருந்த தைரியத்தினாலே தேவன் கோலியாத்தை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். நாமும் மிகுந்த பலனுக்கேதுவான தைரியத்தை தேவனுடைய வார்த்தைகளிலுமிருந்தும், செயல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும்போது **(எபி 10:35).** சமாதானத்தின் தேவன், நம்மை போராட்டங்களினால் பயமுறுத்த முயல்கின்ற சத்துருவை நம் காலின் கீழ் ஒப்புக்கொடுப்பார் **(ரோமர் 16:20).** இந்த ஆண்டை நாம் எப்படி கடத்தினோம் தைரியத்துடனா? பயத்துடனா? சற்றே சிந்திப்போம். வரப்போகின்ற ஆண்டை தேவன் நம்மோடிருக்கிறார் என்ற தைரியத்துடன் எதிர்கொள்வோம்.

### 3. சாலமோன் - ஜெபம்

**1 ராஜாக்கள் 3:5-10** "கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். அதற்குச் சாலொமோன்: என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர். இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்து கொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான். சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது."

சாலமோனை பற்றி படிப்பவர்கள் அனைவரும் அவருக்கு தேவன் தந்தருளிய ஞானத்தினை குறித்து நிச்சயம் வியப்படைவார்கள். அப்படி ஒரு அரசன் அவருக்கு முந்தியும் இல்லை பிந்தியும் எழும்புவதில்லை என தேவனே சொன்னார். அவ்வளவு பெரிய ஞானத்தையும் புத்தியையும் அவர் எவ்விதம் பெற்றுக்கொண்டார் எனவினவினால், பதில் "ஒரு எளிமையான ஜெபத்தினால்" என்றால் நிச்சயமாக அதைவிட அது மிகப்பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. ஆயினும் உண்மை அதுதான். தேவன் தனக்கு கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்ற ஞானம் வேண்டினார். அவர் வேண்டிக்கொள்ளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் பெற்றுக்கொண்டார். நாம் கடவுளிடம் வேண்டிக்கொள்கின்ற ஜெபங்கள் ஒவ்வொன்றும், தேவன் நமக்கு கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்றுவதை நோக்கியா? அல்லது நம் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதை நோக்கியா? எதை நோக்கி உள்ளது. சாலமோன் ஐசுவரியம். சம்பத்து, மதிப்பு மற்றும் மகிமை போன்றவற்றை கேட்கவில்லை என்பதிலிருந்து, நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? இவைகளை குறித்தெல்லாம் போராடி ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் நமது தேவைகள் அனைத்தையும் அவர்

அறிந்திருக்கிறார் **(மத் 6:8).** நமக்கு தரவேண்டியவைகளையும், தவிர்க்க வேண்டியவைகளையும் நன்கு அறிவார். **(மத் 6:32).** நமது பெரும்பாலான ஜெபங்கள் இவைகளை குறித்தே இருக்கின்றது. வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட ஜெபங்களை எல்லாம் படித்து பார்த்தால் , இவைகளை நாம் நன்கு புரிந்துக்கொள்ள முடியும். இப்படி இம்மைக்குரிய இவைகளுக்காக கிறிஸ்துவும் ஜெபிக்கவில்லை, மற்றும் அவருடையவர்களாகிய நம்மை ஜெபிக்கும்படி ஊக்கப்படுத்தவும் இல்லை **(மத் 6:9-13).** ஆகையால், வரப்போகின்ற ஆண்டில் நமது ஜெபங்ளையும், நமது சிந்தனைகளையும் மறுமையை நோக்கி திருப்புவோம் **(கொலே 3:1-3)**

## 4. நெகேமியா - மதில்களை மற்றும் மக்களை கட்டுதல்

**நெகேமியா 4:19-23** "நான் பிரபுக்ககளையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: வேலை பெரிதும் விஸ்தாரமுமாயிருக்கிறது; நாம் அலங்கத்தின்மேல் சிதறப்பட்டு ஒருவருக்கு ஒருவர் தூரமாயிருக்கிறோம். நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள்; நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்றேன். இப்படியே நாங்கள் வேலை செய்து கொண்டிருந்தோம்; அவர்களிலே பாதிப்பேர் கிழக்கு வெளுக்கும் நேரமுதல் நட்சத்திரங்கள் காணுமட்டும் ஈட்டிகளைப் பிடித்திருந்தார்கள். அக்காலத்திலே நான் ஜனங்களைப் பார்த்து: இராமாறு நமக்குக் காவலுக்கும் பகல்மாறு வேலைக்கும் உதவ, அவரவர் தங்கள் வேலைக்காரரோடுங்கூட எருசலேமுக்குள்ளே இராத்தங்கக்கடவர்கள் என்று சொல்லி, நானாகிலும், என் சகோதரராகிலும், என் வேலைக்காரராகிலும், என்னைப் பின்பற்றிக் காவல்காக்கிற சேவகராகிலும் எங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடதிருந்தோம். அவரவருக்கு ஆயுதமும் தண்ணீரும் இருந்தது."

நெகேமியா தலைமைத்துவ பண்பிற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக நம் கவனத்தை ஈர்க்கிறார். எருசலேம் நகரத்தின் உடைந்து போன, சிதைந்து போன மதில்களை கட்டி, பட்டணத்தை அரணிப்பானதாக்க அவர் எடுத்த முயற்சிகள், பட்ட சிரமங்கள் கொஞ்சமல்ல என்பது நாம் அறிந்ததே. ஒரு கையில் சாந்து கரண்டியும், மறு கையில் பட்டயம் ஏந்தியும் கட்டி முடித்தனர். தேவனுக்காக தாங்கள் செய்கின்ற வேலை எந்த வழியிலும் தடைப்பட்டுவிடக்கூடாது என்பதில் அவர் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார். மற்றும் அதை செய்தும் முடித்தார் (1-7 அதிகாரங்கள்). மதில்களை கட்டுவதைவிட மக்களை தேவனுக்காக கட்டுவது தான் (8-13 அதிகாரங்கள்) நெகேமியாவிற்கு பெரும் சவாலாக இருந்தது. வெகு சீக்கிரமே யூத மக்கள் தேவனை மறந்து உலகத்தோடு கலந்துவிட்டனர். இன்றைய நாட்களிலும் இது கடினமானதாகவே இருக்கின்றது. ஒரு உண்மையான கிறிஸ்தவர் உலகத்தோடு ஒத்துப்போக முடியாது, உலகமும் அவரோடு ஒத்துப்போகாது **(யோவான் 15:18-21, 17:14-16)** என்று நமது ஆண்டவர் போதித்ததை மற்றும் ஜெபித்ததை நினைவில்கொள்வோம். எதிர்கொள்ள போகின்ற ஆண்டில் நம்மையும் நம் குடும்பத்தையும், சபையையும் கர்த்தருக்குள் கட்ட தீர்மானிப்போம், செயல்படுவோம்.

## 5. எஸ்தர் - தேவனுடைய மக்களுக்காக மரிக்க துணிதல்

**எஸ்தர் 4:15-17** "அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச்சொன்னது: நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள் நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள். அப்பொழுது மொர்தெகாய் புறப்பட்டுப்போய், எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்."

எஸ்தர் பேரரசி யூத மக்களை காக்க, தன் உயிரை இழக்க துணிந்த, அவர்களின் துணிவு நம் அனைவருக்கும் மிகச்சிறந்த முன்மாதிரியாகும். பேரரசியானாலும் தேவ மனிதன் மொர்தெகாயின் வழிகாட்டுதலின்படி தாழ்மையாக நடந்து, ஆமானின் சூழ்ச்சியை முறியடித்தது மிகவும் சிறப்பான முன்மாதிரியாக உள்ளது. கடவுள் நம்மை உயர்த்தும் போது நாம் தாழ்மையாக, பணிவாக இருக்கும் பட்சத்தில் அது மேலும் உயர்வை தரும் என்பதற்கு இவள் சிறந்த உதாரணம். உலகத்தையே ஆண்ட சாம்ராஜ்யத்தில் எஸ்தர் பேரரசியாக உயர்ந்ததைவிட, ஆபிரகாம், மோசே, தாவீது போன்ற பெரியோரின் வரலாறுகள் பதிவு

செய்யப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில், எஸ்தரின் சரித்திரமும் பதிவு செய்யப்பட்டது நிகரற்ற உயர்வாகும். இன்னும் ஆண்டவரின் இரத்ததத்தால் மீட்கப்படாதவர்களுக்காக (இரட்சிக்கபடாதவர்கள்) நாம் என்ன செய்கின்றோம்? கண்ணீர் சிந்தி ஜெபிக்கின்றோமா? கடுமையாக உழைக்கின்றோமா? அல்லது இந்த உலகத்தின் பின்னே, இந்த உலகத்திற்காக, உலகத்தின் பின்னே வேகமாக சென்றுக்கொண்டிருக்கின்றோமா? கிறிஸ்துவின் தியாகத்தினை நினைவில்கொண்டு, நாம் நிறைவேற்ற வேண்டிய தலையாய் பொறுப்புகளை நிறைவேற்றுவோம். **(1 கொரி 9:15, 1 பேதுரு 2:9, மாற்கு 16:15).**

இறுதியாக, பிரியமானவர்களே! ஆபேல் முதல் இன்னும் நிறைய முன்மாதிரிகளை எபிரெய ஆசிரியர் நமக்கு முன்வைத்துள்ளார். ஒவ்வொரு முன்மாதிரிகளை படிக்கும் போது , நாம் அவர்களிடமிருந்து மிக உயர்ந்த தெய்வீக பண்புகளை கற்று, செயல்படுத்தி, இந்த கடைசிகாலத்தில் வாழ்பவர்களுக்கு நாமும் சிறந்த முன்மாதிரியாக மாறுவோம் மற்றும் வாழுவோம் என்ற தீர்மானங்களோடு வரப்போகின்ற புதிய ஆண்டினை வரவேற்க தயாராவோம். இந்த பரிசுத்த முயற்சியில் நாம் வெற்றியடைய கர்த்தர் அருள்புரிவாராக!.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ராஜா – கரூர்
2. M. ஜோனாத்தான் – கரூர்
3. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
4. A. ஹானா ஜோதி – மதுரை
5. M. செந்தில் குமார் – கரூர்
6. S. கனிஷ்கா – கரூர்
7. R. ராதா கிருஷ்ணன் – மதுரை
8. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை

## பொதுவான செய்திகள்

## கா. ந. அண்ணாத்துரை

காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை



ஓர் இந்திய அரசியல்வாதியும், தமிழகத்தின் ஆறாவது முதலமைச்சருமாவார். பரவலாக இவர் அறிஞர் அண்ணா என்றே அறியப்பட்டார்.

இந்தியா குடியரசான பிறகு, ஆட்சி அமைத்த காங்கிரசல்லாத முதலாவது திராவிடக்கட்சி தலைவரும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தவரும் ஆவார்.

### பிறப்பு

அண்ணாதுரை சின்னகாஞ்சீபுரத்தில் வரகுவாசல் தெருவில் கதவெண் 54 உள்ள வீட்டில் தமிழரான வெங்குந்தக் கைக்கோள முதலியார் மரபில் கைத்தறி நெசவாளர் நடராசன் முதலியார் பங்காரு அம்மாள் என்பருக்கு மகனாக சௌமிய ஆண்டு ஆவணித்திங்கள் 31ஆம் நாள் (1909 – செப்டம்பர் 15) பிறந்தார்.

### இளமைப்பருவம்

அண்ணாதுரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் (முன்னாளில் காஞ்சீவரம்) செப்டம்பர் 15, 1909இல் நடராச முதலியார் மற்றும் பங்காரு அம்மாளுக்கு நடுத்தர குடும்பத்தில் மகனாகப் பிறந்தார். அவர் தந்தை ஒரு கைத்தறி நெசவாளர். அண்ணாவின் பெற்றோர் சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்டனர். அண்ணா தம் அன்னை பங்காரு அம்மாவை சிறு வயதிலே இறந்துவிட்டதால், அவரது தந்தை நடராசன் – ராசாமணி என்பவரை மறுமணம் செய்து கொண்டதால், அண்ணா அவரது சிற்றன்னை ராசாமணி அம்மாளிடம் வளர்ந்து வந்தார். அவரை அண்ணா " தொத்தா " என்று அன்புடன் அழைப்பார். மாணவப்பருவத்திலேயே ராணியம்மையாரை மணம்புரிந்தார். அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை ஆகையால் அவர் தமக்கையின் பேரக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தனர். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்ட அண்ணாதுரை குடும்ப வறுமைக் காரணமாக பள்ளியிலிருந்து தனது படிப்பை தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு நகராட்சி அலுவலகத்தில் உதவியாளராக சிறிது காலம் பணி புரிந்தார்.

– தொடரும்...

# முன்மாதிரியான பெண்கள்

சகோதரி : பேபி ராஜா



பிரியமுள்ள சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள். வேதாகமத்து பெண்களிடமிருந்து வாழ்க்கைக்கு அவசியமான மற்றும் தேவையான பாடத்தை கற்றுக்கொள்ள நம் மனதை ஆயத்தப்படுத்துவோம்.

### 1. சாராள் – கணவனுக்கு கீழ்படிதல்

**1 பேதுரு 3:6** "அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்."

சாராளிடம் நாம் கற்றுக்கொள்ள அநேக முன்மாதிரிகளில் ஒன்று அவள் தன் கணவனுக்கு கீழ்படிகின்ற மனைவியாக இருந்தாள். ஆபிரகாம் சுயநலமாக தன் உயிரை காத்துக்கொள்ள முடிவெடுத்த போதும் (ஆதி 12), அதில் தனக்கு தீங்கு வர வாய்ப்பிருந்த போதும், அவனுக்கு முழுவதும் கீழ்படிகிறவர்களாகவே இருந்தாள். சில நேரங்களில் நமது வீடுகளிலும் இது போன்று நடக்கலாம். கணவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதினாலே தீங்கு வருமென்று தெரிந்து நாம் ஒருவேளை கீழ்படிய மறுக்கலாம். ஒன்றை புரிந்துக்கொள்ளுங்கள் கணவனுக்கு நாம் கீழ்படிய வேண்டும் என்பது தேவ கட்டளை **(எபே 5:22).** தேவ கட்டளைக்கு கீழ்படிவதினாலே எந்த ஒரு நஷ்டமும் ஏற்படாமல், நிச்சயமாகவே தேவன் பாதுகாப்பார். அவர் சாராளை அவ்வாறே பாதுகாத்தார் என்பதை நினைவில்கொள்வோம்.

### 2. ரெபேக்காள் – நன்மை செய்பவள்

**ஆதி 24:17–20** "அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத்தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குச் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்."

ரெபேக்காளிடமிருந்து நாம் கற்க வேண்டிய சிறந்த பண்புகளுள் ஒன்று, அவள் நன்மை செய்கிறவளாக இருந்தாள். அதனை உற்சாகமாக சந்தோஷத்துடனே செய்தாள். வேதாகம வல்லுனர்கள் அந்த கிணறை பற்றி சொல்லும்போது அது கயிறு கட்டி இறைக்கின்ற கிணறு அல்ல, மாறாக படிகளில் இறங்கி தண்ணீர் மொண்டுக்கொள்கின்ற கிணறு என்கின்றனர். ஒரு ஒட்டகம் சுமார் 200 லிட்டர் தண்ணீர் குடிக்கும் என்கின்றனர் அறிவியல் அறிஞர்கள். அப்படியானால் அத்தனை ஒட்டகங்களுக்கும் தாகம் தீர்க்க ரெபேக்காள் எத்தனை குடம் தண்ணீர் எடுத்திருப்பாள். எத்தனை முறை படிகளில் ஏறி இறங்கியிருப்பாள். ஆயினும் அவள் அதனை ஒரு பொருட்டாக எண்ணாமல் உதவி கேட்டவர்களுக்கு மாத்திரமல்ல. உடனிருந்தவர்களுக்கும் அவர்களுடைய மிருகங்களுக்கும்கூட உற்சாகமாக உதவினதிலிருந்து அவள் நன்மை செய்யும் நல்ல குணத்தை நாம் அறிய முடிகிறது. அவள் நன்மையை விதைத்தல் பிரதிபலனாக தேவன் அவளுக்கு நன்மையை அறுவடை செய்ய வைத்தார். தேவனுடைய சிநேகிதனாகிய ஆபிரகாமிற்கு மருமகளானால், ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்ரவேலுக்கு தாயானாள்.

### 3. ரூத் – அன்பு

**ரூத் 1:16–18** "அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிபோவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடே கூட வர மன உறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை."

வேதாகமம் அடையாளப்படுத்துகின்ற முன்மாதிரியான பெண்களில் ரூத்தும் ஒருவர். இவளது நல்ல குணங்கள் அநேக பெண்களுக்கு, இன்றும் ஊக்கமளிக்கின்றன. இவளை போல நல்ல மருமகளாக இருப்பது என்பது அநேக பெண்களுக்கு சவாலான காரியம் தான். மருமகளாக குடிபுகுந்த சில நாட்களிலே மாமியாரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புகின்ற நவநாகரீக கொடூர உலகத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். நகோமி நல்ல மாமியார் அதனால் ரூத் அவள் மீது அன்பாயிருந்தாள் என்று சொல்லி தப்பித்துக் கொள்ள வேண்டாம். அன்பாயிருப்பது என்பது

ளுத்தின் இயல்பாக இருந்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் தன் வாழ்வை பணயம் வைத்திருக்க மாட்டாள். ஏனெனில் நல்லவர்களுக்காக நாம் நம் வாழ்வை தொலைத்துவிட விரும்ப மாட்டோம். பைபிள் நம்மை ஆண்டவர் இயேசுவை போல அன்புக்கூற உற்சாகப்படுத்துகின்றது **(எபே :2).**

### 4. அன்னாள் – தேவனை சார்ந்திருத்தல்

**1 சாமுவேல் 1:10–17** "அவள் போய் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கிக விண்ணப்பம் பண்ணி, சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணுகிறபோது, ஏலி அவள் வாயைக் கவனித்துக் கொண்டிருந்தான். அ ன்னாள்த ன்இ ருதயத்திலே பசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்து; அவள் சத்தமோ கேட்கப்படவில்லை; ஆகையால் அவள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்து, அவளை நோக்கி: நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னை விட்டு விலக்கு என்றான், அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ. நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள். அதற்கு ஏலி சமாதனத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக என்றான்."

தேவனை சார்ந்து வாழ்ந்த ஒரு பெண்மணியாக நாம் அன்னாளை அறிய முடிகிறது. அவள் வாழ்வில் துன்பங்களும் அவமானங்களும் சூழும்போது அவள் தேவனை இறுக பற்றிகொண்டவளாகவும், தேவன் அளித்த நன்மைகளுக்கு நன்றியுள்ளவளாகவும் இருந்ததிலிருந்து அவள் தேவனை சார்ந்து வாழ்ந்ததை நாம் அறிய முடிகின்றது. நாம் யாரை சார்ந்து வாழ்கின்றோம்? நாம் யாரை சார்ந்து வாழ்கின்றோம் என்பதை நாம் நமது துன்பத்தையும் சந்தோஷத்தையும் முதலாவது யாரிடம் பகிர்கின்றோம் என்பதிலிருந்து நாமே நம்மை அறிந்துக்கொள்ள முடியும். இந்த கொடிய நாட்களில் நெடிய ஜெபங்கள் நிறைய செய்திருப்போம். ஆண்டவர் கொஞ்சம் மீதியை வைக்காதிருந்தால் இந்த உலகமே சோதோமை போலாலகி கொமாராவிற்கு ஒத்திருந்திருக்கும் அல்லவா? ஆகையால், வரப்போகிற புதிய ஆண்டிலே நாம் தேவனிடத்தில் நன்றியுள்ளவர்களாக அவரை சார்ந்து வாழ தீர்மானிப்போம் மற்றும் செயல்படுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.


## வாசகர்கள் கவனத்திற்கு!

தடையில்லாமல் உங்கள் பத்திரிக்கையை தொடர்ந்து பெறுவதற்கு, உடனே உங்கள் பெயர். பத்திரிக்கை எண்ணுடன் **"மொபைல்"** எண்ணை எங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பெயர் : ........................ பதிவு எண் : ........................ மொபைல் : ........................

**மேலே குறிப்பிடபட்ட உங்கள் விபரங்களை குறுஞ்செய்தியாகவோ வாட்ஸ்அப் மூலமாகவோ அனுப்பவேண்டிய எண்கள்**

**92 4421 4421, 92 4431 4431**

**விபரங்களை தபாலில் அனுப்புவதற்கு**

**கிருபையுள்ள வார்த்தை, தபால் பெட்டி எண் : 15**

**அரசரடி, மதுரை – 625 016.**

# முன்மாதிரியான வாலிபர்கள்:

சகோ. ஜோசப் பிரதீப்

அன்பான வாலிப சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள். வேதாகமத்து வாலிபர்களிடமிருந்து சிறந்ததொரு வாழ்க்கைக்கு அவசியமான மற்றும் தேவையான பாடத்தை கற்றுக்கொள்வோம்.

**முதலாவது,** கோத்திரத் தலைவனாகிய யாக்கோபின் கடைசி மகனாகிய யோசேப்பு ஒரு நல்ல கடவுள் பயமுள்ளவனாகவும், தகப்பனுக்கு பிடித்த மகனாகவும் இருந்தான். யோசேப்பிடம் கற்றுக்கொள்ள வேண்டிய குணாதிசயங்கள் நிறைய இருந்தாலும் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்ன என்று பார்ப்போமானால், அவர் தனது கொள்கையில் உறுதியாக இருந்தார். போத்திபார் அரண்மனையில் போத்திபாரின் மனைவி யோசேப்பிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சித்த போது அவன் தேவனோடு செய்து கொண்ட உறவில் அதாவது பரிசுத்த வாழ்வில் சரீரத்தையும், ஆவியையும் பரிசுத்தமாக காத்துகொண்ட ஒரு பெரும் குணநலனை பார்க்க முடிகிறது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள ஆவி, ஆத்துமா, சரீரத்தை கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும் **(ஆதியாகமம் : 37–39).**

**இரண்டாவது,** மோசேயின் ஊழியக்காரனாகிய யோசுவா. இந்த வாலிபன் கடவுளுடைய வார்த்தையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவனாயிருந்தான். ஒருமுறை பரலோக கடவுள் அவரை நம்புகிற ஜனத்திற்கென்று ஒரு நேர்தியான தேசத்தை கொடுப்பேன் என்று வாக்குரைத்திருந்தார். அதன்படி தேசத்தை வேவுபார்க்க 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் யோசுவாவும் ஒருவர். அப்பொழுது 12 பேரும் போய் அந்த பாலும், தேனும் ஓடுகிற தேசத்தை வேவு பார்த்தனர். மற்ற எல்லாரும் அங்குள்ளவர்களை பார்த்து பயந்து அந்த தேசம் நமக்கு கிடைக்காது என்ற விசுவாசமில்லாமல் அவநம்பிக்கையான தகவலை தந்தனர். ஆனால் காலேபும், யோசுவாவும் உறுதியுடன், வாக்குரைத்த தேவன் உண்மையுள்ளவர் என்றும் அவருடைய வார்த்தை வல்லமையுள்ளது என்றும் நம்பி, விசுவாச வார்த்தைகளை பேசினார்கள். அதினால் அவனைப் போன்றவர்கள் மட்டுமே அந்த ஆசீர்வாதமான தேசத்தை பெற முடிந்தது. நம்முடைய வாழ்கையிலும் பிரச்சனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதை காட்டிலும் பெரியவராகிய நம்முடைய பரம கடவுளைடைய வார்த்தையின் மீது விசுவாசம் வைக்கும் போது, கர்த்தர் நிச்சயமாகவே பெரிய அளவில் நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்வார் **(எண்ணாகமம் 13).**

**மூன்றாவதாக,** தானியேல் என்கிற விசுவாச வீரனைப் பற்றிப் பார்போம். பாபிலோனில் மிக உயர்ந்ததொரு அரசு பணியில் இருந்தவர் இந்த தானியேல். நாம் நல்ல வருமானம் , வீடு என்ற உயர்ந்த நிலையை அடையும்போது உலகம் கடவுள் சார்ந்த காரியங்களில் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை ஆனால், தானியேலோ தன்னுடைய பதவிக்கோ, வருமானத்துக்கோ முதலிடம் தரவில்லை மாறாக பரம கடவுளுக்கும் அவருடைய வார்த்தைக்கும் மாத்திரமே மரியாதையும், முன்னுரிமையும் தருபவராக இருந்தார். தானியேல், வேலையா? கடவுளா? என்று வந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் உயிரையும் துட்சமாக எண்ணி கடவுள் மாத்திரம் என்றும் தன்னுடைய வைராக்கியத்தை வெளிபடுத்தினார் **(தானியேல் 1).**

எனவே பிரியமானவர்களே! யோசேப்பை போல ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றிலும் பரிசுத்தமாக வாழ்வோம். யோசுவாவை போல தேவனுடைய வார்த்தையின் மீது முழு விசுவாசம் கொண்டிருப்போம். மற்றும் தானியேலை போல உறுதியாய் தேவன் பக்கம் நிற்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# தொடர் 29 2 மற்றும் 3 யோவான்: கிறிஸ்தவ உபசரிப்பில் செய்ய வேண்டிய மற்றும் செய்யக் கூடாதவை

## தலைப்பு

இரண்டு மற்றும் மூன்று யோவானின் நிருபங்கள் அவற்றை எழுதியவரின் பெயரைக்கொண்டு அழைக்கப்படுகின்றன. "அன்பான அப்போஸ்தலர்தான்" இந்த நிருபங்களை எழுதினார் என்று தொடக்ககால எழுத்தாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.

## பின்னணி

யோவான் சுவிசேஷமும் 1,2,3 யோவான் நிருபங்களும் ஒரே நபரால் எழுதப்பட்டன என்பதை சாட்சியங்களின் வரிசையொன்று நிரூபிக்கிறது. முதலாவது, யோவான் சுவிசேஷமும் 1 யோவான் நிருபமும் ஒரே எழுத்தாளரால் எழுதப்பட்டன (இவற்றுடன் யோவான் 1:1 மற்றும் 1யோவான் 1:1). இரண்டாவது, ஒரே தனிநபர் 1 மற்றும் 2 யோவான் நிருபங்களை எழுதினார்: இவ்விரு புத்தகங்களுமே வயது முதிர்ந்த ஒரு நபரால் எழுதப்பட்டன. இவ்விரண்டுமே அறிவு சார்பியம் பற்றிக் கவலைப்படுகின்றன (1யோவான் நிருபம் பற்றி குறிப்புகளைக் காணவும்), மற்றும் இவை இரண்டுமே ஒரேவிதமான வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துகின்றன. மூன்றாவது, ஒரே நபர் 2 மற்றும் 3 யோவான் நிருபங்களை எழுதினார் (இவற்றுடன் 2 யோவான் 1, 12 மற்றும் 3 யோவான் 1,13,14).

2 மற்றும் 3 யோவான் ஆகிய இரு நிருபங்களுமே தனிப்பட்ட கடிதங்களாயிருக்கின்றன. அவைகள் 1 யோவான் நிருபத்தில் எடுத்துரைக்கப்பட்டவற்றில் சில ஆய்வுப்பொருள்களைக் கையாளுக்கின்ன. இவைகள் அனேகமாக ஒரே காலகட்டத்தில் ஒரே இடத்தில் இருந்து எழுதப்பட்டிருக்கலாம்: எபேசு நகரில் கி. பி. சுமார் 90ல் (யோவான் சுவிசேஷம் மற்றும் 1 யோவான் நிருபம் ஆகியவற்றிற்கான குறிப்புகளைக் காணவும்). இவைகள் 1 யோவான் நிருபத்துடன் அனுப்பட்டிருக்கலாம். இந்த நிருபங்கள், தொடக்ககால சபையில் இருந்த நெருங்கிய உறவுமுறை பற்றிய குறிப்புகளை நமக்குத் தருகின்றன.

இரண்டு யோவான் நிருபம் ''தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கு'' எழுதப்பட்டது. இது சபையை குறிப்பதற்கு உருவகநடையாக இருக்கலாம் (எபேசியர் 5:23, 24, 29–32): ஆனால் இந்தக் கடிதத்தின் மென்மையான தனிப்பட்ட தொனியானது, இது ஒரு கிறிஸ்தவத் தாயாக, ஒருவேளை எபேசுவுக்கு அருகில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம் என்று காண்பிக்கிறது. சிலர், ''தெரிந்துகொள்ளப்பட்ட'' (eklekte) அல்லது "அம்மாள்" (kuria) என்ற வார்த்தையை ஒரு தனிநபரின் பெயராக்க ("Electa"அல்லது Cyria) முயற்சி செய்ன்றனர். "தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள்" என்பது ஒரு தனிநபராயிருந்தால், புதிய ஏற்பாட்டில் இது ஒன்று மாத்திரமே ஒரு பெண்ணுக்கு எழுதப்பட்ட கடிதமாயிருக்கிறது.

மூன்று யோவான் , "காயு" என்ற நபருக்கு எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டில் காயு என்ற பெயரில் குறைந்தபட்சம் மூன்று பேர் இருக்கின்றனர் (நடபடிகள் 19:29: 20:4,5: ரோமர் 16:23). இவர்களில் எவராவது, 3 யோவான் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் ஒரு நல்ல கிறிஸ்தவர் என்பது தெளிவாகிறது.

''உபசரிப்பு'' என்பது இவ்விரு புத்தகங்களையும் இணைக்கிற ஆய்வுக் கருத்தாகும். உபசரிப்பு என்பது புதிய ஏற்பாட்டுக்கிறிஸ்தவத்தின் வலிவாா்ந்த பகுதியாக இருந்தது (எபிரேயர் 13 : 1, 2). பயணத்தின் சிரமங்கள் மற்றும் பொதுவான தங்கும் இடங்களின் வருந்ததக்கநிலை ஆகியவை, உபசரிப்பை இரு மடங்கு முக்கியமானவையாக்கின. ஆதரித்தல் மற்றும் கவனித்தல் ஆகியவற்றின் இந்த வெளிப்பாடு, பயணம் செய்கின்ற சுவிசேஷமாகத் தேவைப்பட்டது (மத்தேயு 10: 11 – 13ஐக் கவனிக்கவும்). இவ்விரு கடிதங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களின் உபசரிப்பினிமித்தம் குறிப்பிடத்தக்கவர்களாய் இருந்தனர் (3 யோவான் 5 – 8). "தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளை," உண்மையில், கள்ளப்போதகர்களை உபசரித்தல் பற்றி எச்சரிக்க வேண்டியிருந்தது (யோவான் 9–11). அன்றாடம் அதிகம் தனித்துவமற்றதாகிவரும் உலகத்தில்,

உபசரிப்பு பற்றிய வேதாகம வலியுறுத்தும் புத்துணர்வூட்டுவதாயிருக்கிறது.

## 2 யோவான் நிருபத்தின் வரைகுறிப்பு

I. யோவான் தொடங்குகின்றார் (வசனங்கள் 1 – 3)

II. யோவான் பாராட்டுகின்றார் (வசனம் 4)

III. யோவான் கட்டளையிடுகின்றார் (வசனங்கள் 5,6)

A. அன்பு கூருவதற்கு.

B. கீழ்ப்படிதலுக்கு

IV. யோவான் எச்சரிக்கின்றார் (வசனங்கள் 7–11)

A. கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

B. தவறை மறுத்துரையுங்கள்.

I. யோவான் முடிக்கின்றார் (வசனங்கள் 12, 13).

## 2 யோவான் நிருபத்தில் இருந்து பாடங்கள்

அறிவுசார்பியக் கொள்கையாளர்கள் "தொடக்ககால நவீனவியலாளர்கள்" என்று அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேதவசனத்தின் வரலாற்று உண்மைகளையும் ஒழுக்கக் கட்டளைகளையும் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளாதிருந்தனர். அவர்கள் மனிதனின் ஆவிக்குரிய நன்மைக்கு அவசியமானயாவும் வேதவசனங்களில் அடங்கியுள்ளன என்பதை நம்பாதிருந்தனர். துர்திஷ்டவசமாக, அவர்கள் தங்கள் நவீன எதிர்கொள்கைகளைக் கொண்டிருந்தனர்.

இன்றைய நாட்களில் உணர்வியலாளர்கள், கிறிஸ்து திரும்பி வருவதற்கு முன்பு வினோதமான உருவங்கொண்ட "அந்திக்கிறிஸ்து", என்பவன் வருவான் என்று பேசுகின்றனர். இருப்பினும், யோவான், இந்த சொற்றொடர் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வாழவிருந்த தனிநபர் ஒருவரையல்ல, ஆனால் தமதுநாட்களில் இருந்த, மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை மறுதலிக்கும் அறிவுசார்ந்த கொள்கையாளர்கள் யாவரையும் குறித்தது என்பதைத் தெளிவாக்கினார். (வசனம் 7: 1 யோவான் 2: 18, 19, 22: 4:1 – 6 ஐக் காணவும்).

வசனங்கள் 9–11 ஐ, நாம் இருதயத்தில் வைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. தவறான போதனைகளை மன்னித்து விட்டுவிடுகின்றோம் என்ற மனப்பதிவை ஏற்படுத்தும் எந்த ஒரு விஷயத்தையும் நாம் ஒருக்காலும் செய்யக்கூடாது.

2 யோவான் 12 மற்றும் 3 யோவான் 13, 14 ஆகிய வசனங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள் ( புதிய ஏற்பாட்டின் இருபத்தியோரு நிருபங்களினால் மெய்ப்பிக்கப்படுகின்றபடி), கடிதங்கள் எழுதுவதில் மதிப்புள்ளது, ஆனால் சில விஷயங்களை முகம் முகமாய் வெளிப்படுத்துவது மிக மேன்மையானதாக உள்ளது


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431*) ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.


# சவுல்



தேவனுடைய செல்லப் பிள்ளைகளா, எப்படி இருக்கிறீர்கள்? எல்லாரும் நல்லா இருக்கிறீர்களா? இந்த வருடத்தின் கடைசி மாதத்தை நாம் சந்திக்கும்படி கர்த்தர் செய்திருக்கிறார். கர்த்தருக்கு எல்லாரும் நன்றி சொல்லுங்கள்.

இப்பொழுது எல்லாரும் சவுல் அண்ணனை பற்றித் தெரிந்துக்கொள்ளலாமா?

ஒருமுறை சவுல் அண்ணனின் அப்பா கீஸ் கழுதையை தொலைத்துவிட்டார். அப்பொழுது சவுல் அண்ணனை அழைத்து நீ போய் நமது வேலைக்காரன் ஒருவனை அழைத்துக்கொண்டு, காணாமல் போன நமது கழுதையை தேடி கண்டுபிடித்துகொண்டு வா என்றார். அப்பொழுது சவுல் அண்ணன் அப்பாவுக்கு கீழ்படிந்து கழுதையை தேடி போனான். உங்க வாழ்க்கையில் உங்க அப்பா அம்மாவுக்கு கீழ்படிகிறீர்களா? இவன் கழுதையை தேடி போனால், கழுதை எங்கும் கிடைக்கவில்லை.



சவுலின் வேலைக்காரன் இந்த ஊரில் சாமுவேல் தீர்க்கதரிசி என்று ஒருவர் இருக்கிறார் அவரிடம் கேட்டால், அவர் நமக்கு உதவி செய்வார் என்று சொன்னதினால், ஒவ்வொரு இடமாக தேடி அலைந்து கடைசியாக சாமுவேலை சந்திக்கிறான். சாமுவேல், சவுலை நோக்கி, கர்த்தர் உன்னை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம் செய்ய சொன்னார் என்று சொல்லும்போது, சவுல் என்ன சொன்னார் தெரியுமா? இஸ்ரவேலிலேயே மிகச்சிறிய பென்யமீன் கோத்திரத்தில், மிகவும் சிறிய குடும்பத்தை சார்ந்தவன். என்னை போய் இராஜா என்று சொல்லுகிறீர்களே! என்று தன்னை மிகவும் தாழ்த்தினான்.

கடவுளின் செல்லங்களா! உங்களை கடவுளுக்கு முன்பாகவும், உங்கள் பெற்றோருக்கு முன்பாகவும், பெரியவர்களுக்கு முன்பாகவும் தாழ்த்துகிறீர்களா? தாழ்மையுள்ள சவுலை, தேவன் இஸ்ரவேல் நாட்டிற்கு ராஜாவாக உயர்த்தினார். ராஜாவாக உயர்ந்த பின் சவுல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல், சுயபுத்தியினால் பெருமையாக நடந்து, தாழ்ந்து போனான். அவனை ராஜாவாக உயர்த்தியதற்காக கடவுளே வருத்தப்படும் அளவிற்கு நடந்துக்கொண்டான்.

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளே! கர்த்தர் உயர்த்தும் முன்பு இருக்கின்ற தாழ்மை மற்றும் கீழ்படிதலை, கர்த்தரால் உயர்த்தப்பட்ட பின்பும் கடைபிடிப்போம். அது தான் நல்ல குணம். அப்பொழுதுதான் கர்த்தருக்கு உங்களை பிடிக்கும். செய்வீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடவசனம் : 1சாமு 15:22** "அவர்அ திகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது."

— அன்புயேசுதாஸ்

# நோவா



ஹாய் குட்டீஸ்! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கடவுள் வார்த்தையின்படி வாழ்ந்த நோவா என்பவர் இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில், மக்கள் மிகவும் பொல்லாதவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்களுடைய இந்த தீமையான செயல்கள் தேவனுக்கு வருத்தத்தை கொண்டுவந்தது. அதினால் தேவன் உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் அழிக்கப்போவதாக தீர்மானம் செய்தார்.

நோவா மட்டுமே தேவனுக்கு முன்பாக நல்லவராக, தேவனுக்கு பயந்து தீமை செய்யாதவாராக இருந்தார். தேவன் நோவாவை அழைத்து, நீ கொப்பேர் என்னும் மரத்தால் 300 முழம் நீளமும், 50 முழம் அகலமும், 30 முழம் உயரமுமாய் இருக்க உனக்கு பேழையை (கப்பல்) செய்து, அதிலே அறைகளையும் வைத்து, ஜன்னல் வைத்து கீழ் பூசு என்றார். நோவா தேவன் தனக்கு கட்டளையிட்ட எல்லாவற்றையும் அப்படியே செய்து முழுமையாக கீழ்படிந்தார்.

அந்த பேழை எவ்வளவு பெருசா இருந்தது தெரியுமா? இந்த பூமியிலுள்ள மிருகங்கள்,

பறவைகள், பிராணிகள், விலங்குகள் எல்லாவற்றிலும் ஒரு ஜோடும் நோவா தாத்தா, அவர் மனைவி, அவருடைய 3 மகன்கள் மற்றும் 3 மருமகள்கள் என அனைவரையும் தாங்கத்தக்க இருந்தது. எல்லாரும் ஏறினப் பிறகு தேவன் பேழையின் கதவை அடைத்துவிட்டார். 40 நாள் இரவும் பகலும் விடாமல் மழை பெய்தது. பூமியிலுள்ள எல்லா உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி அழிந்து போனது. ஆனால் பேழைக்குள் இருந்த நோவாவும் அவருடைய குடும்பமும் மற்றும் மிருகங்களும் பத்திரமாக காப்பற்றபட்டது.



குட்டீஸ்! தேவன் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்து கீழ்பந்ததினால் நோவாவும் அவர் குடும்பமும் பெரிய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. நாமும் தேவனுக்கு கீழ்படிவோம், அதுவும் நோவாவை போல முழுமையாக கீழ்படிகின்றவர்களாக இருப்போம். தேவன் நம்மையும் பாதுகாப்பார்.

**மனப்பாடவசனம் :** உபா 28:1 "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்."

– குயினி பிரதீப்

# மோசே


சிறுவர் பகுதி

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்வின் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் இறுதி மாதத்திற்கு வந்துவிட்டோம். இந்த மாதம் மோசோயை பற்றி தெரிந்துக்கொள்வோமா?

மோசே வனாந்திரத்திலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார், அப்பொழுது ஒரு ஆச்சரியமான காரியத்தை கண்டார். அதென்னவென்று அறிய மோசே அதனருகில் சென்றார். மோசே பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து அவர் மோசேயை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். மோசே இதோ, அடியேன் என்றான். உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.

மேலும், நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான். அப்பொழுது தேவன், எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்த்து, அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் ஏபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றழைத்தார்.

மோசே நிறைய காரணங்களை சொல்லி தவிர்க்க பார்த்தார். ஆயினும் கடைசியில் அந்த அழைப்பிற்கு கீழ்படிந்து, தேவனுடைய வழிகாட்டுதலின்படி இஸ்ரவேல் மக்களை விடுவித்து, கானான் தேசத்தை நோக்கி வழிநடத்தினார். ஏறக்குறைய 40 ஆண்டுகளாய் அவர் தேவனுக்கு கீழ்படிந்து மக்களை வழிநடத்துகிறவராக நடந்துக்கொண்டார். அவருடைய செயலை கண்ட தேவன் என்னுடைய



வீட்டில் (குடும்பத்தில்) மோசே போல ஒரு உண்மையுள்ள வேலைக்காரன் இல்லை என்று பாராட்டை பெற்றார்.

செல்லங்களா! மோசே தேவன் பாராட்டும்படி ஒரு உண்மையுள்ள வாழ்வை வாழ்ந்தார். நம்மையும் தேவன் அழைத்திருக்கிறார். நேரப்பட சபைக்கூடுகைகளுக்கு செல்வது, ஆர்வமாக பங்கேற்பது, ஆண்டவருடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்படிவது என மோசேயை போல உண்மையுள்ளவர்களாயிருப்போம். தேவனுடைய


– பிரியா ஆண்டனி

# ஈசாக்கு

சிறுவர் பகுதி

அன்பான செல்லப் பிள்ளைகளே! உங்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் என் வாழ்த்துக்கள். இந்த முறை நாம் ஈசாக்கிடமிருந்து சிறந்த குணங்களை கற்றுக்கொள்வோமா?

ஈசாக்கு என்றால் சிரிப்பு என்று அர்த்தம். இந்த ஈசாக்கு ஆபிரகாம் மற்றும் சாராளின் ஒரே செல்ல மகன். தேவனுடைய ஆபிரகாமிற்கு வாக்களித்த வாக்குத்தத்தங்களின் மகன். ஈசாக்கின் பிறப்பும் அற்புதமான ஒன்றாகும். ஈசாக்கு அப்பா அம்மாவிற்கு கீழ்படிபவராகவும், தேவனை விசுவாசிப்பவராகவும், மற்றும் அவருக்கு பயந்து வாழ்பவராகவும் இருந்தார்.



ஈசாக்கிற்கு சுமார் 12 வயதிருக்கும் போது, தேவன் ஆபிரகாமை நோக்கி, உன் மகன் ஈசாக்கை எனக்கு பலியிடு என்றார். ஆபிரகாமும் ஈசாக்கை பலியிட சென்றார். ஈசாக்கு தன் தகப்பன் தன்னை பலியிட பேசுகிறார் என்று தெரிந்தும். எப்பொழுதும் தகப்பனுக்கு கீழ்படிகிறபடியே, அப்பொழுதும் கீழ்படிந்து, தன் தகப்பன் தன்னை பலியிட பலிபீடத்தின் மீது ஏறி படுத்தார். அடம்பிடிக்கவில்லை, அழுகவில்லை மற்றும் தன் தகப்பனை குறை சொல்லவும் இல்லை என்ன ஒரு குணம் பாருங்கள். பிறகு தேவனே வேண்டாம் என தடுத்தார்.

சிறுவயதில் மாத்திரமல்ல பெரியவனான போதும் தன் தகப்பனும் தாயும் சொல்கிறபடி நடந்து, ஒழுக்கமான பிள்ளையாக, வாலிபனாக வளர்ந்தார். திருமண காரியத்திரும் கீழ்படிந்து நடந்தார். தன் தகப்பனும் தாயும் கற்றுக்கொடுத்த அந்த பரலோக கடவுளை மாத்திரம் விசுவாசித்து வழிபட்டார். மற்றும் அவருக்கு பயந்து வாழ்ந்தார். அதினால் ஈசாக்கின் கையின் பிரயாசத்தை தேவன் நூறு மடங்கு ஆசீர்வதித்தார்.

செல்லங்களே, ஈசாக்கை போல நாமும் நமது தாய்க்கும் தகப்பனுக்கும் கீழ்படிந்து நடப்போம், தேவனுக்கு பயந்து வாழ்வோம். அவரை விசுவாசித்து அவரை மாத்திரம் வழிபடுவோம். தேவன் நம்மையும் ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடவசனம் :** எபே 6:1–3 "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது."

– பெவர்லி கிங்ஸ்லி

## சிறுவருக்கான கேள்விகள்

1. சவுலை ராஜாவாக்கும் முன்பு எப்படிபட்டவனாக இருந்தான்?
2. சவுல் ராஜாவான பிறகு எப்படி நடந்துக்கொண்டான்?
3. நோவா தேவனுக்கு முன்பாக எப்படிப்பட்டவராக இருந்தார்?
4. தேவன், மோசேக்கு கொடுத்த பாராட்டு என்ன?
5. ஈசாக்கின் நல்லகுணம் என்ன ?

# டிசம்பர் மாத கேள்விகள்

1. 'நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தவன் யார்?

2. 'கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல' என்றது யார்?

3. 'அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்' என்று ஜெபித்தது யார்?

4. 'நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்' என்றது யார்?

5. 'சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்' என்றது யார்?

6. 'ஆண்டவனே' என்று சொல்லி கணவனுக்கு கீழ்படிந்தது யார்?

7. 'உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்பேன்' என்றது யார்?

8. 'உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்' என்றது யார்?

9. 'நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்' என்றது யார்?

10. 'மேகம் போன், இதனை திரளான சாட்சிகள் சூழ்ந்துக்கொண்டிருக்க நாம் செய்ய வேண்டியது என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-01-2020**

**அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. கொலோ 3:13 | 6. யோவான் 3:30 |
| 2. அப் 10:38 | 7. எபி 3:1 |
| 3. யோவான் 8:16 | 8. எபே 5:2 |
| 4. 1 யோவான் 2:6 | 9. நீதிமொழி 6:20 |
| 5. மத் 11:29 | 10. மாற்கு 10:21 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. R. சரோஜா – தென்கலம்
2. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
3. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
4. S. சூசைமரியன் – சென்னை
5. A. கேரேனா எலிசபெத் – சென்னை
6. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
7. M. ஜெனி – கரூர்
8. C. முத்துக்குமரன் – கரூர்
9. Mrs. D. மீனாள் – மூலனூர்
10. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
11. J. விஜய் – மதுரை
12. Mrs. லீலா ஜோசப் – கோவை
13. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
14. Mrs. மேரி ராஜ் – மதுரை
15. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
16. Mrs. ஹெலன் திலக் – மதுரை
17. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
18. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
19. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
20. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
21. R. ராதா கிருஷ்ணன் – மதுரை
22. Mrs. P. சமாதனம் பீட்டர் – விருதுநகர்
23. S. பாக்கிய ராஜம்– மதுரை
24. Mrs. R.P. டேவிட் – ஏற்காடு
25. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
26. Mrs. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
27. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
28. Mrs. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை
29. Mr. A. ஆனந்த கதிரோன் – சென்னை

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுபித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-
G-Pay No. 92 4421 4421

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

**Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH**
Place of Publication : **Arasaradi, Madurai**
Printer's Name : **N. JAYAKARTHIKEYAN**
**Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2018 - 2020**
**Date of Publication : 8th December 2020**
**Posted at Arasaradi HPO on 10th 11th December 2020**



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH







**AVAILABLE FOR SPECIAL PRICE!**


**If undelivered please return to :**

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers